**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 153/2017** பி.வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சொக்கநாதன் | **வயது** | : | 73 |
| **த.பெ** | : | மாணிக்கபிள்ளை | **தாலுக்கா** | : | சேத்பட் |
| **கிராமம்** | : | நெடுங்குணம் | **தொழில்** | : | ஓய்வு பெற்ற உயர்நிலைபள்ளி தலைமை ஆசிரியர் |

**25.11.2025–பி. வா.சா.1 குறுக்கு விசாரணை**

1)தாவா சொத்து இடையன்குளத்தூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நெடுங்குணத்திலிருந்து இடையன்குளத்தூர் கிராமத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும். தாவாசொத்தை நான் வாங்குவதற்கு முன் நான் அதன் வில்லங்கத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். தாவா சொத்தின் சர்வே நெம்பர் 167 /7 பி ஆகும். தாவா சொத்தின் ஆதி சர்வே நெம்பர் 167/7 ஆகும். மேற்படி சர்வே நெம்பர் 167/7 பி நான் கிரையம் பெற்றதற்கு பின் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே நெம்பர் 167 /7 ன் முழு விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 27 செண்ட் ஆகும். ஆதியில் மேற்படி 1 ஏக்கர் 27 செண்ட் ராமகவுண்டர் அவர்களுக்கு உரிமையான சொத்து என்றால் சரிதான். ராமகவுண்டர் அவர்களுக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல்மனைவிக்கு பிறந்தவர் தான் குண்டால் கவுண்டர் என்றால் சரிதான். 2 ம் மனைவி அம்மாகண்ணு அவர்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 மகள்கள் உள்ளார்கள். அவர்களின் பெயர்கள் கன்னியம்மாள், சந்தியம்மாள் (சந்தியாஎன்றும் அழைப்பார்கள்)

2)கன்னியம்மாளின் மகன் தான் வாதி அண்ணாதுரை என்றால் சரிதான். நான் வில்லங்கத்தை பார்த்தாக கூறும்நிலையில் மேற்படி அம்மாகண்ணும் கன்னிம்மாளும் ஒரு கண்ணகவுண்டருக்கு ஒரு கிரையம் எழுதிகொடுத்த விவரம் அதில் இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி கிரையபத்திரம் தான் 06.12.2000 த்தில் எழுதிகொடுக்கப்பட்ட கிரையபத்திரம் என்றால் சரிதான். மேற்படி கண்ணகவுண்டர் அவர்கள் 08.10.2001 ல் வாதிக்கு வழக்கு சொத்தை கிரையபத்திரம் மூலம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணங்களை நான் பார்த்த பிறகு நான் கிரையம் பெற்றேனா என்றால் மேற்கண்ட ஆவணங்கள் செல்லாது என்றுதான் நான் கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெறுவதற்கு முன்புவரை வருவாய்துறை ஆவணங்கள் அம்மாகண்ணு அம்மாள், கன்னியம்மாள், மற்றும் அண்ணாதுரை பெயரில் இருந்ததா என்றால் அம்மாகண்ணு பெயரில் இருந்தது.

3)எந்த தேதியில் சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் 11.05.2015 ல் கிரையம் பெற்றேன். வழக்கு தாக்கல் செய்தபிறகு தான்நான் கிரையம்பெற்ற சொத்திற்கு வருவாய் துறை ஆவணங்களில் என் பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் சரிதான். தாவா சர்வே நெம்பர் முழு விஸ்தீரணம் 1 ஏக்கர் 27 செண்டில் 0.63 ½ செண்ட் தான் பிரச்சனை என்றால் சரிதான். மேற்படி 0.63 ½ செண்டிற்கு வடக்கே பாட்டை என்றால் சரிதான். தெற்கே சகுந்தலாம்மாள் நிலம் என்றால் சரிதான். கிழக்கே கோபால் கவுண்டரிடமிருந்து நான் கிரையம் பெற்ற நிலம் என்றால் சரிதான். மேற்கில் செல்வத்துக்கு குண்டால் கிரையம்கொடுத்த நிலம் என்றால் சரிதான். மேற்படி செல்வம் குண்டாலுக்கு கொடுத்த நிலத்தின் வருவாய்துறை ஆவணங்கள் அவர்பெயரில் மாறவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி 4 சக்குபந்திக்குள் தான் வழக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2025.11.26 15:27:34 +0530

District Munsif,
Polur.